**இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, பணியகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பணியகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பணியகத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பணியகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

---------------------

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பணியகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 61,565,855 ஆன கட்டட வாடகை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பணியகத்திற்கும் அதிகாரசபைக்கும் இடையில் கட்டட வாடகை தொடர்பில் சட்டரீதியாக இதுவரையில் இணக்கப்பாட்டிற்கு ஒப்பந்தம் எதுவும் கைச்சாத்திட்டிருக்கவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் இரு தரப்பினர்களிடையே ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திட்டதன் பிற்பாடு கணக்கில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய வாடகையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும் என. |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்திலான சான்றுகளின்மை

| விடயம் | தொகை ரூ. | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்விச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 12 தூதரக அலுவலகங்கள் பொருட்டு வழங்கப்பட்ட தீர்க்கப்படாத முற்பணங்கள் | 31,131,053 | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் | பணியகம் இந்த மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக தற்போது செயலாற்றி வருகிறது. | இயைபான மீதிகளை உறுதிப்படுத்திக் கொண்டு தாமதமின்றி சமர்ப்பித்தல் வேண்டும் என. |

## 1.6 பெற வேண்டிய கணக்குகளும் செலுத்த வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய ரூபா 1,060,254,984 ஆன மீதியினுள் 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலுவையாக இருந்த மீதி ரூபா 3,304,920 ஆக இருந்தது. | 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்த ரூபா 3,304,920 மீதி 2016 இறுதிக் கணக்குகளில் ஐயக் கடன் ஏற்பாடு ஆக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகமானது, எதிர்காலத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கு சமர்ப்பித்ததன் பிற்பாடு அதன் அங்கீகாரத்தின் பேரில் குறித்த மீதியை கணக்குகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகளை உடனடியாக அறவிடல் வேண்டும் என. |

### 1.6.2 செலுத்தவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்வேறு கடன்கொடுநர்களின் கீழ் காட்டப்பட்ட மீதிகளிலிருந்து ரூபா 8,103,211 தொகை 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திலிருந்தும், ரூபா 2,344,090 தொகை 03 ஆண்டுகளுக்கு குறைந்த காலத்திலிருந்தும் காணப்படும் கடன்கொடுநர் மீதிகளை உள்ளடக்கி இருந்தது. | இதனை இனங்கண்டதன் பிற்பாடு சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை விழிப்பூட்டப்பட்டிருப்பதுடன், இரு தரப்பினர்களினதும் இணக்கப்பாட்டின் பேரில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை உடனடியாக செலுத்தி முடித்தல் வேண்டும் என. |

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

கீழே காணப்படும் சட்டங்கள் விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலா அலுவல்கள் சட்டத்தின் VII ஆம் அத்தியாயத்தின் 40 ஆம் பிரிவின் 09 ஆம் உப பிரிவு | பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்து மூன்று மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்பில் அவ்வாண்டினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் திட்டங்கள் போன்றன அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் அவதானிப்புடன் உடன்படுவதுடன் அதன்படி எதிர்காலத்தில் செயலாற்றப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள், வெளியீடுகள் மற்றும் திட்டங்களை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும் என. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| (i) நிதி ஒழுங்குவிதிகள் 102 & 104 | ரூபா 308,700 பெறுமதி கொண்ட மூன்று லெப்ரொப் கணினி தொலைந்தமை தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் செயலாற்றியிருக்கவில்லை. | அங்கு சர்ச்சைக்கு ஏதுவான இனங்காணப்படாத பொருள் விசாரணை பொருட்டு மனித வள மற்றும் நிருவாகப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சேதம் தொடர்பில் ஒழுங்குவிதி பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும் என. |
| (ii) நிதி ஒழுங்குவிதி 169(2) | 2016 ஆம் ஆண்டில் மதிப்பிழந்த ரூபா 220,000 பெறுமதியான 03 காசோலைகள் தொடர்பில் இந்த ஒழுங்குவிதி பிரகாரம் செயலாற்றியிருக்கவில்லை. | இத்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பில் நி.ஒ. பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும் என. |
| (iii) நிதி ஒழுங்குவிதி 757 | மீளாய்வாண்டிற்கு ஏற்புடையதாக நிலையான சொத்துக்கள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிற்குரிய மீளாய நிலையான சொத்துக்கள் கணிப்பாய்வு அறிக்கை தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளது. | உரிய காலப்பகுதியினுள் நிலையான சொத்துக்கள் கணிப்பாய்வினை மேற்கொள்ளுதல் வேண்டும் என. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 1,675,032,291 மிகையாக இருந்தவுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,929,150,032 ஆக இருந்தது. அதற்கிணங்க, நிதிசார் விளைவுகளில் ரூபா 254,117,741 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு மீளாய்வாண்டில் **புறப்படுதல்** வரி வருமானம் ரூபா 312,299,139 ஆல் அதிகரித்தமைக்கு எதிராக வர்த்தக செலவினங்கள் ரூபா 508,510,397 ஆல் அதிகரித்தமை பிரதான காரணங்களாக விளங்கின.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 6 நாடுகள் பொருட்டு சுற்றுலா மேம்பாடு நிமித்தம் உறப்பட்ட செலவுகள் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினுள் உயர்ந்த சதவீதத்தை பெற்றிருந்த போதிலும், குறித்த நாடுகளின் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் வளர்ச்சி வீதம் மீளாய்வாண்டினுள் குறைந்திருந்தது. | சீனாவில் அதியுயர் சுற்றுலா சந்தை பொருட்டு பங்குபற்றுதல், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்தில் சுற்றுலா சந்தை பொருட்டு கூடங்களை அமைத்தல், அத்துடன் மலேசியாவில் மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக விசேட விழாவொன்றை நடாத்தியமை போன்ற காரணங்களினால் செலவுகள் உயர்வடைந்தன என. | சுற்றுலாப் பயணிகளின் வருகையின் வளர்ச்சி வீதத்தை அதிகரித்துக் கொள்வதற்கு செயலாற்றுதல் வேண்டும் என. |
| (ஆ) செயல் திட்டத்தின்படி மீளாய்வாண்டில் உலகின் பிரதான 28 நாடுகளில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த விற்பனை மேம்பாட்டு நிகழ்வுகளின் எண்ணிக்கை 152 ஆக இருந்ததுடன், அவற்றில் நிறைவேற்றியிருந்த எண்ணிக்கை 89 ஆகும். | ஐக்கிய இராச்சியம், மலேசியா, ஜேர்மனி, பிரான்சு, அவுஸ்ரேலியா, ஜப்பான், ஸ்கெண்டினேவியா, சுவிசலாந்து, ஒஸ்றியா போன்ற நாடுகளில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த வெளியக பிரச்சார நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நுகர்வோர் வர்த்தக சந்தைகள் என்பன சந்தர்ப்பத்துக்கேற்ப எடுத்த முகாமைத்துவ தீர்மானங்களின் அடிப்படையிலேயே செயற்படுத்தவில்லை. | செயல் திட்டத்தின்படி செயலாற்றுதல் வேண்டும் என. |